4th August 1966]

கைத்தறித் துணிகள் இறக்குமதித் தடை

* 90 கேள்வி.— திரு. து. ப. அழகமுத்து : } கனம் கூட்டுறவு
திரு. வை. சங்கரன் :
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) நமது மாநிலத்தின் கைத்தறித் துணிகள் சிலோனில் இறக்குமதி செய்வது இலங்கை சர்க்காரால் தடை செய்யப் பட்டுள்ளது சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

(இ) ஆமெனில், பாதிக்கப்படும் கைத்தறித் தொழிலுக்கு மாற்றுத் திட்டம் ஏதேனும் உருவாக்கப்பட்டுள்ளதா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சக்கரை மன்ருடியார் : (அ) 1966 ஜூலையிலிருந்து இலங்கையில் கைத்தறித் துணிகள் இறக்குமதியாவதை இலங்கை அரசாங்கம் தடை செய்யலாமென வெளிவந்த சில பத்திரிகை அறிக்கைகள் அரசாங்கத்தின் கவனத் திற்கு வந்தன. ஆயினும், இச் செய்திக் குறிப்பை உறுதிப்படுத்தும் வகையில் அரசாங்க அறிக்கை எதுவும் வரவில்லை.

(இ) இது குறித்து அதிகாரபூர்வமான தகவல் இல்லாதபோது, இதன் விளைவாக ஏற்படும் நிலைமையைச் சமாளிப்பதற்கான நட வடிக்கைகள் பற்றி நினைப்பதற்கு இது தருணமல்ல.

திரு. வை. சங்கரன் : இந்த ஒரு செய்திக்கு ஆதாரம் இருக் கிறதா என்று நம்முடைய அரசாங்கம் தெரிந்து கொண்டதா? நம்முடைய ராஜ்யத்தில் இருந்து சிலோனுக்கு ஏராளமாகக் கைத் தறித் துணிகள் செல்லுவதால் இந்தச் செய்திக்கு ஆதாரம் இருக் கிறதா என்று தெரிந்து கொண்டார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சக்கரை மன்ருடியார் : முக்கிய கேள்விக்குப் பதில் சொன்னேன். கைத்தறித் துணியை இலங்கைக்கு அனுப்புவதில் பாதிக்கப்படுகிற நிலைமை ஒன்றும் இல்லை. சர்க்காரிடம் குறிப்பாக அதிகாரபூர்வமான தகவல் ஒன்றும் இல்லை.

திரு. எஸ். முருகையன் : இந்தியத் துணிகளை இலங்கையில் இறக்குமதி செய்யக் கூடாது என்ற செய்தி வந்தவுடன் கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்குக் கடன் கொடுப்பதை மாவட்ட கூட்டுறவு பாங்க் நிறுத்தி விட்டதா ? உடனடியாகப் பண உதவி செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சக்கரை மன்ருடியார் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : இலங்கையில் கைத்தறித் துணிகள் இறக்குமதி செய்யக் கூடாது என்பது பற்றிய அதிகாரபூர்வமான தகவல் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

[4th August 1966

அந்த அதிகாரபூர்வமான தகவலை இலங்கை அரசிடமிருந்து எதிர்பார்க்கிறார்களா அல்லது இந்திய அரசு தூதுவர் அலுவலகத்தில் இருந்து எதிர்பார்க்கிறார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சக்கரை மன்றாடியார் : ஒரு குழுவை அனுப்பி என்ன நிலை என்று தெரிந்து கொள்ளலாம் என்ற முடிவில் அரசாங்கம் இருந்து கொண்டிருக்கிறது.

MR. SPEAKER : We cannot get any intimation from the Ceylon Government direct. It must come through the Central Government.

திரு. இரா. நெடுஞ்செழியன் : இதுபற்றிய உண்மை நிலை என்ன என்பதை இந்திய தூதராலயம் மூலம் அறிய முயற்சி எடுக்கப் பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சக்கரை மன்றாடியார் : தெரிந்து கொள்ளவேண்டுமென்றுதான் முயற்சி.

Handloom Weavers' Co-operative Societies

* 91. *Q.*—SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of Handloom Weavers' Co-operative Societies that have claimed rebate in Tiruttani taluk, Chingleput district for the year 1964–65 ;

(*b*) the number of societies among them that were granted rebate and the number disallowed rebate ; and

(*c*) the reasons for the disallowance ?

THE HON. SRI N. NALLASENAPATHI SAKKARAI MANRADIAR : (*a*) Twenty-six societies claimed rebate.

(*b*) (i) Thirteen were granted rebate.

(ii) Five were disallowed rebate. Eight are under investigation.

(*c*) The societies did not satisfy the conditions governing the grant of rebate.

மீன் வலைகள்.

* 92 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்ய மீனவர்களின் நைலான் நூல் வருடாந்திரத் தேவை அளவென்ன ?

(இ) அத் தேவை எவ்விதம் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) 1,00,000 (ஒரு லட்சம்) கிலோ கிராம்.